– முடியுமாயின் எமது சமூகத்தின் பண்பாகிய வெளியேற்றும் சூழல்களின் தொகுதி ஒன்றைத் திரட்டவும்; இந்த சூழல்களை மாற்றுவதற்கான மதிநுட்பங்கள் பற்றிய கலந்துரையாடல்.

# 1.6 தன் அடையாள மூலக்கூறு

**இலக்கு**

*மாணவர் தமது பண்பாட்டு அடையாளத்தை உருக்காட்டி பொதுவானவற்றையும், வேறுபாடுகளையும் தெரிந்து கொள்வர். அவர்கள் தங்களுடைய மாறுபாடான குழு இணைப்புக்களையும், சிறுபான்மையான அல்லது பெரும்பான்மையான குழுக்களுடனான இணைப்பையும் அத்துடன் தொடர்பான பட்டறிவையும் தெரிந்துகொள்வர்.*

வகுப்பு 4 - 9 | 45 - 90 மணித்துளிகள்

**கருவிகள்:**
அடையாள மூலக்கூறு பணித்தாள் (எடுத்துக்காட்டு வலப்பக்கம் பார்க்கவும்)

**குறிப்புகள்:**

சான்று: "A World of Difference"; Institute Training Manual, ©1994 Anti-Defamation League.

**நடைமுறை:**

- என்ன சிக்கல் என்பதை கிரகித்துக்கொள்ள "எனது தனியாள் அடையாள மூலக்கூறு" எனும் பணித்தாளை மாணவர் பெற்றுக்கொள்வர். முதலில் ஒரு சிறிய வகுப்பறை கலந்துரையாடலிலும், பின்னர் தனியாகவும் பல்விதக் குழுக்களில் தாம் எக்குழுவுடன் தொடர்புள்ளவர் என்று சிந்தனை செய்வர்.

- நடுவிலுள்ள வட்டத்தினுள் தங்கள் பெயர்களை எழுதிய பின் தாங்கள் எந்தக் குழுவுடன் இணைக்கப்பட்டுள்ளார்கள் என உணர்கின்றனரோ அந்த வேறுபாடான குழுக்கள் பெயர்களைச் சுற்றியுள்ள வட்டங்களில் எழுதுவர். (குடும்பம், பள்ளி, ஓய்வு நேரம், பிறந்த நாட்டு உறவினர், அரட்டைக் குழுக்கள், முகநூல் நண்பர்கள் முதலியவை)

- இரண்டாவது படிமுறையில், குழுத் தொடர்பாளர்களைக் கண்டுகொள்வதற்காக ஆசிரியர் "எழுந்துநிற்றல்" பயிற்சியை நடத்துவர், அவர் வரக்கூடிய வேறுபட்ட குழுக்களை அழைத்துக்கொள்வர். ("உதைபந்தாட்டக் குழு", "பிறந்த நாட்டில் உறவுகள்" முதலியவை.) இந்தக் குழுக்களை நிரல்பண்ணிய மாணவர் எழுந்துநின்று ஒரு சிறு உரை செய்யலாம். தொடர்ச்சியாக அழைக்கப்படாத ஆனால் பணித்தாளில் நிறப்படுத்தப்பட்ட வகைப்பாடுகள் கலந்துரையாடப்படும்.

- மூன்றாவது படிமுறையில் இரண்டு பேர் கொண்டு மாணவர் குழுக்களை உருவாக்குவர். (யாருடன் குறைவான தொடர்புகளைப் பேணுகின்றாரோ அவருடன் இணையாகச் சேரல் விரும்பத்தக்கது.) எந்தக் குழுக்கள் இணைப்புக்கள் தங்கள் மீது செல்வாக்குச் செலுத்துகின்றன, எந்தவகையான வேறுபட்ட ஆட்கள், தனியாள், அரசியல், சமூக நிகழ்வுகள் (குடும்பம், ஓய்வுநேரம், தேசியப் பண்பாடும் பாரம்பரியங்களும்) அவர்களது பண்புகளை உருவமைப்புச் செய்தன என்பதை ஒவ்வொரு குழுவும் கலந்துரையாடும். இந்தக் குழுவின் அங்கத்துவராக இருப்பதில் உள்ள குறிப்பான கருத்தும் இன்றியமையாமையும் என்ன? இக்குழுவில் அங்கத்தவராக இருப்பது எவ்வளவு எளிது அல்லது கடினம்? இணையர்களாக கலந்துரையாட வேண்டிய தூண்டிகள் பற்றி முன்னரே விளக்கியிருக்க வேண்டும்.

- இச்செயற்பாட்டை முடிவுறுத்துவதற்கு முழு வகுப்பும் செய்யக்கூடியவை: அதற்கான பரிந்துரைகள்

  – இரண்டு பேர்கொண்ட குழுவில் எவ்வகையான முக்கிய கருத்துக்களை நீங்கள் விவாதித்தீர்கள்?

  – மாணவர் ஏதாவது புதிதாக அல்லது தங்களைப் பற்றி வியப்புடன் ஒன்றைக் கண்டுபிடித்தார்களா?

  – எழுந்துநில் பயிற்சியில் அல்லது இணையர்களின் கலந்துரையாடலில் மாணவர்கள் தம்மைப்பற்றி புதிதாக அல்லது வியப்பான ஒன்றை (குறிப்பிட்ட பால் அல்லது குறிப்பிட்ட அகவைக்கான நடத்தை) தெரிந்துகொண்டார்களா?


  – எநத குழு இணைப்புகள் சிக்கலானதாகவும் வலிதரத் தக்கதாகவும் இருந்தன?

1

– உமது கருத்தின்படி எக்குழுவின் இணைப்புகள் சமூகத்தால் மதிக்கப்பட்டுள்ளன? எவை மதிக்கப்படவில்லை?

- குறிக்கப்பட்ட கடைசிக் கேள்விக்கு விடை கூறுவதற்கு முதலில் பல்வேறு சமூகக் குழு இணைப்புகள் பற்றி கலந்துரையாடுவது பயனுள்ளது (செழுமை - வறுமை, உள்நாட்டவர் - வெளிநாட்டவர், ஆண் - பெண், கிறிஸ்தவர்கள் - முஸ்லிம்கள், பல்பாலினத்தார் - ஒருபாலினத்தார் முதலியவை.) இக் குழுக்களுடன் சேர்ந்திருப்பதால் உள்ள சமூக நலன்களும், குறைபாடுகளும் அவற்றின் ஏற்புடைமைக்கு பின்வரும் அளவுத் திட்டத்தினூடாக கலந்துரையாடி விளங்கப்படுத்த முடியும்.

**எனக்கே உரிய அடையாள மூலக்கூறு**




# 1.7 ஒற்றுமையே பலம்

**இலக்கு**

*கூட்டு வலு என்னும் கொள்கையினூடாக ஒருவர்க்கொருவர் தங்கியிருத்தல் என்பது தம்முடைய அடையாளத்தைக் கைவிட்டு விடுதல் என்பது அல்ல என மாணவர்கள் கற்றுக்கொள்கின்றனர். ஒரு குழுவின் பக்கத்துணையால் வரும் நன்மைகள் மிகத் தெளிவாகவே காணக்கூடியனவாக இருக்கின்றன.*

வகுப்பு 7 - 9

30 மணித்துளிகள்

**கருவிகள்:**
சிறு தடிகள் அல்லது உருண்ட மரத்தடிகள் (5.மி.மீ விட்டம், 30-40 செ மீ நீளம், இரண்டு ஒரு மாணவருக்கு) நூல், சிறுகடதாசி, பெயரட்டைகள்.

**குறிப்புகள்:**

சான்று: Schilling, Dianne (1993): Miteinander klarkommen. Toleranz, Respekt und Kooperation trainieren. (Getting along with each other. Tolerance, respect and cooperation training). Mülheim an der Ruhr: Verlag an der Ruhr.

**நடைமுறை:**

- 6 – 12 பேர் கொண்ட ஒரு மாணவர்கள் குழுவை உருவாக்குவர். ஒவ்வொருவரும் ஒரு தடியைப் பெறுவர். தடிகள் மாணவர்களையே குறியீடு செய்கிறது என ஆசிரியர் விளங்கப்படுத்துவர். இத்தடிகள் அவர்களது பலம், பலவீனம், உணர்வுகளை கொண்டுள்ளன என கற்பனை செய்ய வேண்டும். மனிதர்களுக்குள்ள வாழ்வியல் சிக்கல்களும், மன அழுத்தங்களும் சில நேரங்களில் அவர்களை வலுவிழக்கவும், உடைந்துபோகவும் செய்கிறது என்பதை இத்தடிகள் பிரதிபலிக்கும். மாணவர் தமது தடிகளை உடைத்து இந்த நிலைமையைச் செயல் முறையாகச் செய்து காட்டுவர்.

- தடிகளை உடைத்த பிறகு ஆசிரியர் எவ்வளவு அழுத்தம் தேவைப்பட்டது என்று மாணவரைக் கேட்பார். – மிகக் குறைவான அமுக்கம், நடுத்தரமான அமுக்கம், மிகக் கூடிய அமுக்கம். பலர் தடிகளை மிக எளிதாகவும், அதே வேளையில் மற்றவர்கள் மிகக் கடுமையாகவும் முயற்சித்தனர் என அறியக்கூடியதாயிருக்கும்.